**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்**: 335 **நாள்**:27.07.2026

**எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகிய மருத்துவப் பயனாளர்களின் உதவியாளர்கள் தங்கும் விடுதிக் கட்டடத்தினை பயன்பாட்டிற்கு இன்று கொண்டுவரப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் அறிவுறுத்தலின்படி, எழும்பூ அரசு தாய்சேய் நல மருத்துவமனை மற்றும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகிய மருத்துவப் பயனாளர்களின் பெண் உதவியாளர்கள் தங்கும் விடுதிக் கட்டடம் பயன்பாட்டிற்கு இன்று (27.07.2026) கொண்டுவரப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், தற்போது பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ள இந்த தங்கும் விடுதியினை இன்று (27.07.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, இங்கு தங்கும் பெண்களுக்கு, தரமான உணவு, குடிநீர் உள்ளிட்ட அனைத்து வசதிகளுக்கான சேவையினை சிறப்பாக வழங்கிடவும், இந்த விடுதியினை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த தங்கும் விடுதிக் கட்டடம் தரைத்தளம் மற்றும் நான்கு தளங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் சாப்பிடும் அறை மற்றும் சமையலறையும், நான்கு தளங்களில் தலா 25 படுக்கை வசதிகள் என 100 படுக்கை வசதிகளுடனும் கட்டப்பட்டுள்ளது. இது பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகிய மருத்துவப் பயனாளர்களின் உடனிருந்து கவனிக்கும் பெண் உதவியாளர்களுக்கு பாதுகாப்பான, தூய்மையான மற்றும் கண்ணியமான தற்காலிகத் தங்குமிட வசதியை வழங்குகிறது. இங்கு தங்குவோருக்கு வசதியான தங்குமிடம், பாதுகாப்பான குடிநீர், கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகள், மின்சாரம், பராமரிப்புச் சேவைகள், பாதுகாப்பு மற்றும் நாளொன்றுக்கு மூன்று வேளை சத்தான உணவு (காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு) உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகள் வழங்கப்படுகின்றன.

நோயாளிகளைப் பராமரிப்பவர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாத வகையிலும், முதல் நாளிலிருந்தே தடையற்ற சேவைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும், இந்தத் தங்குமிடம் தற்போது செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் இதன் பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**